ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2333/26 – 2023 මැයි මස 25 වැනි බ්‍රහස්පතින්දා – 2023.05.25

2333/26 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

**2023 ஆம் ஆண்டின் 92 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல. : 4-3/11/2022/CEB/141.
பிரதேச செயலாளர் குறிப்பு இல. : DS/MN/LB/05/AQ/WPP/Phl.Ext/11.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், இங்கு கீழக் காணும் அட்டவணையின் 1ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தரொருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல.1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023, ஏப்பிறல் 19.

**அட்டவணை**

1. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்**: பிரதேச செயலாளர், மன்னார் நகரம்.

2. **காணியின் விபரம்** : வட மாகாணத்தில், மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகரம் பிரதேச செயலாளர் பிரிவில், இல. MN/60, ஓலைத்தொடுவாய் மற்றும் MN/62, தோட்டவேலி கிராம அலுவலர் பிரிவுகளில், தோட்டவேலி மற்றும் ஓலைத்தொடுவாய் ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2023.02.24 ஆந் திகதிய MN/MNN/2022/312 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் பின்வரும் பெயர்கள், விஸ்தீரணத்தைக் கொண்ட காணித் துண்டுகளின் எல்லைகள்:

*01.* **துண்டு 'A' - மக்காணிதோட்டம்- விஸ்தீரணம் : 0.1722 ஹெக்டயார்**

வடக்கு: (உரிமை கோருவோர் தெரியாத) மக்காணிதோட்டம்; கிழக்கு: (உரிமை கோருவோர் தெரியாத) மக்காணிதோட்டம் துண்டுகள் B மற்றும் C; தெற்கு: துண்டுகள் C,D மற்றும் (உரிமை கோருவோர் தெரியாத) மக்காணிதோட்டம்;மேற்கு: (உரிமை கோருவோர் தெரியாத) மக்காணிதோட்டம்.



இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*02.* **துண்டு 'B' - மக்காணிதோட்டம்- விஸ்தீரணம் : *0.3876* ஹெக்டயார்**

வடக்கு: துண்டு A, (உரிமை கோருவோர் தெரியாத) மக்காணி தோட்டம் மற்றும் வீதி (பிரதேச சபை); கிழக்கு: வீதி (பிரதேச சபை) மற்றும் துண்டு C; தெற்கு: துண்டுகள் C மற்றும் D; மேற்கு: துண்டுகள் D, A மற்றும் (உரிமை கோருவோர் தெரியாத) மக்காணிதோட்டம்.

*03.* **துண்டு 'C' - மக்காணி தோட்டம்- விஸ்தீரணம் : *1.8927* ஹெக்டயார்**

வடக்கு: துண்டுகள் D,A,B மற்றும் வீதி (பிரதேச சபை); கிழக்கு: வீதி (பிரதேச சபை) மற்றும் (உரிமை கோருவோர் தெரியாத) மக்காணிதோட்டம்; தெற்கு: (உரிமை கோருவோர் தெரியாத) மக்காணிதோட்டம்; மேற்கு: (உரிமை கோருவோர் தெரியாத) மக்காணிதோட்டம், துண்டுகள் D,A மற்றும் B .

*04.* **துண்டு 'D' - மக்காணி தோட்டம்- விஸ்தீரணம் : *0.0217* ஹெக்டயார்**

வடக்கு: (உரிமை கோருவோர் தெரியாத)மக்காணிதோட்டம், துண்டுகள் A மற்றும் B; கிழக்கு: துண்டு C ; தெற்கு: துண்டு C மற்றும் (உரிமை கோருவோர் தெரியாத) மக்காணிதோட்டம்; மேற்கு: (உரிமை கோருவோர் தெரியாத) மக்காணிதோட்டம், மற்றும் துண்டு A.

EOG 05 - 0226

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

**2023 ஆம் ஆண்டின் 93 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல. : 4-3/11/2022/CEB/151.
பிரதேச செயலாளர் குறிப்பு இல. : DS/MN/LB/05/AQ/WPP/Phl.Ext/17.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், இங்கு கீழக் காணும் அட்டவணையின் 1ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தரொருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப் பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர", காணிச் செயலகம்,
இல.1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023, ஏப்பிறல் 19.

**அட்டவணை**

*1.* **காணி எடுத்தல் உத்தியோகத்தர்**: பிரதேச செயலாளர், மன்னார் நகரம்.

*2.* **காணியின் விபரம்** : வட மாகாணத்தில், மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகரம் பிரதேச செயலாளர் பிரிவு இல.MN/60, ஓலைத்தொடுவாய், கிராம அலுவலர் பிரிவில், ஓலைத் தொடுவாய் கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை யாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2023.02.27 ஆந் திகதியW/MN/MNN/2022/325 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் பின்வரும் பெயர், விஸ்தீரணத்தைக் கொண்ட காணித் துண்டின் எல்லைகள்:

*01.* **துண்டு 'A' - ஓலைதொடுவாய் காணி- விஸ்தீரணம் : *0.7005* ஹெக்டயார்**

வடக்கு: (உரிமை கோருவோர் தெரியாத) ஓலைதொடுவாய் காணி; கிழக்கு: (ஏ. எம். எம். அஜ்வத்தினால் உரிமை கோரப்பட்ட) கிழவன்வாடி தென்னந்தோட்டம்; தெற்கு: (ஏ.எம். எம். அஜ்வத்தினால் உரிமை கோரப்பட்ட) கிழவன்வாடி தென்னந்தோட்டம் மற்றும் (உரிமை கோருவோர் தெரியாத) ஓலைதொடுவாய் காணி ; மேற்கு: (உரிமை கோருவோர் தெரியாத) ஓலைதொடுவாய் காணி.

EOG 05-0227

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.*